For his speech and action in Parliament a Member is subject only to the discipline of the House itself and no proceedings civil or criminal, can be instituted against him in any court in respect of the same.

(A.I.R. 1959 S C. 395)

Similarly leave of the House is necessary for giving evidence in a court of law in respect of the proceedings in that House or Committee thereof or for production of any document connected with the proceedings of that House or Committee thereof. If a member gives evidence in a court of law in respect of the proceedings of the House without the permission of the House, that will also amount to breach of privilege. Threatening to inflict pecuniary loss upon a member on account of his conduct in Parliament/Legislature is a breach of privilege.

தற்போது உறுப்பினர் எழுப்பியுள்ள பிரச்சினையில் உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரைக்காகத்தான் வழக்கு தொடரப்பட்டு உள்ளதா என்று தெளிவாக இல்லை. உறுப்பினர் அதற்கு ஆதாரமாக இணைத்துள்ள ஆவணத்தில் இந்த வழக்கு அவையில் உறுப்பினரால் பேசப்பட்டதற்காகத் தான் போடப்பட்டுள்ளது என்பதற்கான குறிப்பும் அதில் தெளிவாக எதுவும் இல்லை. மேற்கண்ட நீதிமன்றத் தீர்ப்புகளின்படியும், அரசியல் சட்ட விதிகளின்படியும் இவ்வவையில் உறுப்பினர் ஆற்றிய உரைக்காக எவரும் வழக்குத்தொடர முடியாது என்று தெரிவித்து இந்தப் பிரச்சினைக்கு நான் முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

(முற்பகல் 9–10)

3. தகவல் கோரல்.

(அ) ஊதியக் குழு அறிக்கையை அரசுக்கு அளிப்பது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாள், ஆகவே ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்தை ஈர்ப்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். மாநில அரசு ஊழியர்களுக்காக போடப்பட்டுள்ள ஊதியக் குழு அதனுடைய அறிக்கையை சமர்ப்

பித்துள்ளதா? இல்லை என்றால், அதற்குக்காலம் நீட்டிக்கப்பட்டு இருக்கிறதா? ஏற்கெனவே இந்த அறிக்கை பெறப்பட்டு, அதன் மீது முடிவு எடுக்கப்பட்டு ஜூன் மாதத்திலிருந்து அவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊதியங்கள் வழங்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கின்ற காரணத்தால், இதைத் துரிதப்படுத்த அரசும், முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கை 15 ஆம் தேதி வாக்கில் அரசிடம் வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ''ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்'' தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முதலாவதாகத் தொடங்கும்போதே, நான் முதலமைச்சருடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் 7, 8 மாதங்களாக இன்னும் ஒரு மாத ஊதியமும் பெற முடியாமல், தொடர்ந்து போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆரம்பத்திலே இது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கை எடுப்பதாகவும், தொடர்ந்து இங்கேயுள்ள தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சொல்லி வந்தார்கள். ஒரு மாத ஊதியத்தைக் கொடுத்துவிட்டு, தொழிற்சாலையைத் திறந்தால், வேலைக்கு வருவதாகவும், மேற்கொண்டு விஷயங்களைப் பேச்சு வார்த்தைகளின் மூலமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தொழிற் சங்கங்களும் ஏனைய சங்கங்களும் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகின்றன. ஒரு மாத ஊதியத்தைக் கூட அவர்களுக்குத் தராமல் 8, 9 மாத ஊதியங்கள் பாக்கியாக இருக்கிற நிலையில், ஒரு மாத ஊதியத்தைக்கூட தராமல் அந்த முதலாளி மறுத்துக்கொண்டு வருகிறார். அதனால் அந்தத் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். ஆகவே இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிய இருக்கிற காரணத்தால், இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, உடனடியாக அந்தத் தொழிலாளர்களுடைய கஷ்டத்தைப் போக்கக்கூடிய நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவும், அந்த ஆலையைத் திறப்பதற்கும்,